### மியாட் மருத்துவமனையில்

# வயிற்றுச்சுவர் கேன்சருக்கு நவீன சிகிச்சை அறிமுகம்



வயிற்று சுவர் புற்றுநோய் நவீன சிகிச்சை பற்றிய கருத்தரங்கில் பங்கேற்ற மருத்துவர்களுடன் மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிறுவனர் மோகன்தாஸ், நிர்வாக இயக்குனர் பிரிதிவி மோகன்தாஸ்.

சென்னை, நவ. 22: வயிற்றுச்சுவர் கேன்சருக்கு இங்கிலாந்து மருத்துவர்களுடன் இணைந்து, மியாட் மருத்துவமனை நவீன சிகிச்சையை அறிமுகப்படுத்தியுள்ளது.

வயிற்றுச்சுவர் புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் "ஹைபெக்" எனப்படும் நவீன முறையை, இங்கிலாந்து மான்செஸ்டர் நகரில் உள்ள கிறிஷ்டி பவுண்டேசன் என்ற புற்று நோய் ஆராய்ச்சி மையம் வெற்றிகரமாக செயலாக்கி உள்ளது. இதன் மூலம் வயிற்றுச்சுவர் கேன்சர் நோயாளிகள் அறுவை சிகிச்சைக்குப்பின் ஹைபெக் சிகிச்சை மூலம் தங்கள் ஆயுளை மேலும் 5 ஆண்டு வரை நீட்டிக்க முடிகிறது.

கடந்த 10 ஆண்டுகளாக மியாட் மருத்துவமனையில் எலும்பு புற்று நோய் சிகிச்சை முறைக்கும், கடந்த ஆண்டு சர்க்கரை நோயாளிகள் மற்றும் பொதுவான கேன்சர் நோயாளிகளுக்கும் இந்த புதிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கிலாந்தில் சிறப்பாக உள்ள ஹைபெக் முறை சாதாரணமாக நடைமுறையில் உள்ள கீமோ தெரபி முறையை விட சிறப்பானது.

இந்த சிகிச்சை தொடர்பாக, இங்கிலாந்து நிபுணர்களுடன் மியாட் மருத்துவமனை ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. அதற்கு, இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதற்கான 2 நாள் கருத்தரங்கு மற்றும் நிபுணர்களின் செயல் விளக்க ஆய்வரங்கம் மியாட் மருத்துவமனையில் நேற்று துவங்கியது. இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேடிவ் ஸ்தாபகர் டாக்டர் பிரிதிவி மோகன்தாஸ் ஆய்வரங்கத்தை தொடங்கி வைத்து, செயல்பாடுகள், நோக்கம் பற்றி விளக்கினார்.

ஆய்வரங்கத்தில் இங்கிலாந்து மான்செஸ்டர் புற்றுநோய் ஆராய்ச்சி மைய நிபுணர் டாக்டர் சாரா ஓடோயர் உள்ளிட்ட இங்கிலாந்து நிபுணர்கள், சூடான், எத்தியோப்பியா, மஸ்கட்டை சேர்ந்த புற்றுநோய் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மியாட் மருத்துவமனையின் புற்று நோய் மருத்துவ நிபுணர்கள், செவிலியர்கள், ரேடியாலஜி நிபுணர்கள் கலந்து கொள்கின்றனர். பின்னர் நிருபர்களை சந்தித்த இங்கிலாந்து நிபுணர்கள் மற்றும் மியாட் மருத்துவமனை நிபுணர்கள் கூறியதாவது:

வயிற்றுச்சுவர் கேன்சர் காரணமாக பாதிக்கப்படுபவர்கள் இந்தியாவில் குறைவு. ஆனால், அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின்னர் கீமோதெரபிக்கு பதில் இந்த ஹைபெக் நவீன சிகிச்சை அளிக்கப்படும்போது நோயின் தீவிரம் வெகுவாக குறைந்து நோயாளியின் ஆயுட்காலம் மேலும் ஐந்தாண்டு வரை நீடிக்கிறது. இந்த சிகிச்சை இந்தியாவிலேயே மியாட் மருத்துவமனையில்தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தனர்.